# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2084/2 - 2018 අගෝස්තු මස 13 වැනි සඳුදා - 2018.08.13

*2084/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மத்திய மாகாண சபை நீர்ப்பாசன நியதிச்சட்ட வரைபு

மத்திய மாகாண சபையின் மத்திய மாகாண விவசாய, சிறிய நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கமநல அபிவிருத்தி, நன்னீர் மீன்பிடி, தமிழ்க் கல்வி (முஸ்லிம் பாடசாலைகள் தவிர்ந்த) இந்து கலாசாரம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் எம். ராமேஸ்வரன் ஆகிய நான், இங்கு பிரசுரமாகும் மத்திய மாகாணத்தின் நீர்ப்பாசன நியதிச்சட்ட வரைபு இந்த வர்த்மானியில் பிரசுரமாகும் தினத்தில் இருந்து இரண்டு வாரங்கள் கழிந்த பின்னர் மத்திய மாகாண சபையில் முன்வைப்பதாக இத்தால் அறிவிக்கின்றேன். இந்த நியதிச் சட்ட வரைபின் விதிமுறைகள் தொடர்பில் திருத்தங்கள் அல்லது கருத்துக்கள் தெரிவிக்க யாரேனும் விரும்புமிடத்து அவற்றை குறித்த காலப்பகுதிக்குள் என்னிடம் சமர்ப்பிக்கலாம்.

**எம். ராமேஸ்வரன்,**<br>
மத்திய மாகாண விவசாய, சிறிய நீர்ப்பாசன,<br>
விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, கமநல அபிவிருத்தி,<br>
நன்னீர் மீன்பிடி, தமிழ்க் கல்வி (முஸ்லிம் பாடசாலைகள் தவிர்ந்த)<br>
இந்து கலாசாரம் மற்றும் தோட்ட<br>
உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்.

மத்திய மாகாண விவசாய அமைச்சு,<br>
கெட்டம்பே,<br>
2018, ஓகத்து 03.

***"2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மத்திய மாகாண நீர்ப்பாசன நியதிச்சட்ட வரைபு"***

*மத்திய மாகாண விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் விதத்தில் விவசாயம் சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக மத்திய மாகாணத்தின் நீர்ப்பாசனம் சார்ந்த திட்டமிடல், திட்டம் வரைதல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் பராமரித்தல் போன்ற பணிகளுக்காக மத்திய மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தை நிறுவுதல் மற்றும் நீர்ப்பாசன முகாமை அபிவிருத்திக் குழு மற்றும் நீர்ப்பாசன பிரதேச அதிகார சபை நிறுவுதல் மற்றும் அதனது நடவடிக்கைகள், பொறுப்புக்கள், அதிகாரங்கள் என்பவற்றை வகுப்பதற்காகவும் அதனுடன் தொடர்புடைய காரணிகளுக்கான விதிமுறைகளை அமைப்பதற்கான நியதிச்சட்ட வரைபாகும்.*

***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுகின்றது.***

*சுருக்கப்பெயரும் நடைமுறைத் திகதியும்.*

*1. இந்த நியதிச் சட்டம் மத்திய மாகாண மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மத்திய மாகாண நீர்ப்பாசன நியதிச் சட்டம் என அழைக்கப்படுகின்றது. அத்துடன், மத்திய மாகாண ஆளுநரின் அங்கீகாரம் பெறும் தினத்திலிருந்தே இது நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

I *ஆம் பகுதி*

***மத்திய மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தை நிறுவுதல்***

*மாகாண நீர்ப்பாசன திணைக்களம் நிறுவுதல்.*

*2. இந்த நியதிச் சட்டத்தில் அடங்கும் விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக மத்திய மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் அடையாளப்படுத்தப்படும் (இதனகத்து பின்னர் திணைக்களம் என அழைக்கப்படும்) திணைக்களம் நிறுவப்படல் வேண்டும்.*

*மத்திய மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்.*

*3.* (i) *திணைக்களத்தின் பணிகள் மற்றும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காக (இதனகத்து பின்னர் மாகாணப் பணிப்பாளர் என அழைக்கப்படும்) மத்திய மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டும். இவர் நிறுவனத் தலைவராக இருக்க வேண்டும் என்பதுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டம் மற்றும் தேசிய கொள்கைகள் என்பவற்றுக்கு இணங்க பிரகாரம் மத்திய மாகாண ஆளுநரால் நியமிக்கப்படுவார்.*

(ii) *இலங்கைப் பொறியியலாளர் சேவை 1 ஆம் வகுப்பு உத்தியோகத்தர் ஒருவர் மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்படல் வேண்டும்.*

(iii) *மாகாணப் பணிப்பாளர் மாகாண நீர்ப்பாசனத்திற்கு பொறுப்பான செயலாளரின் மேற்பார்வையின் கீழ் நியதிச்சட்ட விதிகளை செயற்படுத்த வேண்டும்.*

*திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்களை நியமித்தல்.*

*4. இந்த நியதிச் சட்டத்தில் அடங்கும் விடயங்கள் மற்றும் விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக அவசியப்படும் பொறியியலாளர்கள் மற்றும் அலுவலர்களை 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைச் சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்படல் வேண்டும்.*

*அதிகாரப் பகிர்வு.*

*5. மாகாணப் பணிப்பாளரின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் மேலே 4 ஆம் விதிமுறைக்கு அமைய நியமிக்கப்படும் அலுவலர்களிடம் ஒப்படைக்கலாம்.*

*மாவட்ட அல்லது பிரதேச காரியாலயங்கள் நிறுவுதல்.*

*6. கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அலுவலகங்கள் அமைச்சரால் நிறுவ முடியும். அமைச்சின் செயலாளரின் சிபாரிசிற்கு அமைய தேவைக்கு ஏற்ப பிரதேச காரியாலயங்களை அமைக்கலாம்.*

II ஆம் பகுதி

**திணைக்களத்தின் பொறுப்புகளும் அதிகாரங்களும்**

7. திணைக்களத்தின் பொறுப்புக்களும் அதிகாரங்களும் கீழ்வருமாறு அமைய வேண்டும் :- *திணைக்களத்தின் பொறுப்புகளும் அதிகாரங்களும்.*

i. மாகாண நீர்ப்பாசனப் பணிகளுடன் தொடர்புடைய திட்டமிடல், திட்ட வரைபு, செயற்படுத்தல், கண்காணித்தல், பராமரித்தல் ;

ii. சிறிய நீர்ப்பாசனப் பணிகளை மறுசீரமைத்தல், புனரமைத்தல் ;

iii. மேலே (i) (ii) பிரிவுகளின் கீழ் வரும் நீர்ப்பாசனத் திட்டத்தின், உள் அல்லது அவற்றுக்கு பிரவேசிக்கக் கூடிய பாதைகளை அமைத்தல், பராமரித்தல், புனரமைத்தல் ;

iv. இந்த நியதிச் சட்டத்தின் ஊடாக செயற்படுத்துவதற்காகவுள்ள பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான விதிமுறைகளை அமைத்தல் ;

v. மத்திய மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவு அடிப்படையில் திணைக்களத்தின் எல்லைக்கு உட்பட்ட நீர்ப்பாசனங்களின் பட்டியல் வர்த்தமானி ஊடாக பிரசுரித்தல் ;

vi. தேவைக்கு ஏற்ப இப்பட்டியல் திருத்தியமைக்கப்படலாம் ;

vii. நீர்ப்பாசன முகாமை மற்றும் அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச நீர்ப்பாசன முகாமைக் குழு என்பன உருவாக்கலும் பதிவு செய்தலும் அவற்றை மேற்பார்வை செய்தலும் ;

viii. மேற்படி (v) இன் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற நீர்ப்பாசனத் திட்டங்களில் மாகாணப் பணிப்பாளரின் அனுமதியின்றி வேறு நிறுவனங்கள் ஊடாக பராமரிப்பு அல்லது புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படாமை குறித்து அவதானமாக இருத்தல் மற்றும் அனுமதி வழங்கப்படுகின்ற பணிகள் குறித்து திட்டமிடல் மற்றும் தகவல்களைப் பேணிவரல் ;

ix. நீர்ப்பாசனப் பாதுகாப்பு வலயங்களை அடையாளம் காணல், எல்லை நிர்ணயித்தல், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நீர்ப்பாசனத்திற்கான ஊட்டல் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் ;

x. நீர்ப்பாசனத் தொகுதிகளுக்கு சேதம் விளைவிக்கும், ஆக்கிரமிக்கும், மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளில் சேமித்து வைத்திருக்கும் நீரை ஏதேனும் ஒரு முறையில் தெரிந்தோ அல்லது தீய நோக்கிலோ விரயமாகும் விதத்தில் செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்;

xi. ஏதேனும் நீர்ப்பாசனத் தொகுதி ஒன்றில் ஏதேனும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடல் அல்லது கைத்தொழில் ஒன்றில் ஈடுபடல், அல்லது அவ்வாறான நீர்ப்பாசனத் தொகுதி ஒன்றை அனுமதியற்ற செயற்பாடொன்றுக்காக பயன்படுத்தும் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

xii. நீர்ப்பாசனத் தொகுதிகள், விவசாய நிலங்கள் என்பவற்றுக்கு ஏற்படும் வெள்ளம், மண்சரிவு போன்ற பாதிப்புக்களை கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்கலும் நடைமுறைப்படுத்தலும்

xiii. நீர்ப்பாசனத் திட்டங்களின் ஊடாக விநியோகிக்கப்படும் நீர் மற்றும் விவசாய நோக்கங்களுக்காக வழங்கப்படும் நீர் வினைத்திறனாக நிர்வகிக்கப்படல்.

xiv. நீர்ப்பாசனத் திட்டங்களின் நிர்மாணிப்பு, பராமரிப்பு, பாதுகாப்பு, தொடர்பாகவும் நீரில் உச்ச பயன்பாட்டைப் பெறும் வழிமுறைகள் தொடர்பாகவும் மக்களுக்கு அறிவூட்டல் மற்றும் பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

xv. நீர்ப்பாசனத் திட்டங்கள் சார்ந்த பணிகளில் அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்பை பேணிவரல்.

xvi. பயிர் நிலமொன்றிலிருந்து நீர் வடிந்தோடும் முறைகளை அமைத்தல், அந்த இடத்திற்கு வெளி நீர் வராமல் அல்லது அந்த நிலத்திலிருக்கும் நீர் வெளியேறாமல் தடுத்துக் கொள்ளல் அல்லது அந்த அமைப்பிலுள்ள நிலம் வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படாமலிருக்கும் வகையில் பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்படும் பொறியியல் துறை சார் வேலைத் திட்டங்களை திட்டமிடல், நிர்மாணித்தல், பராமரித்தல், பாதுகாத்தல், புனரமைத்தல்.

xvii. அரச, அரசு சாராத மற்றும் சுயாதீன நிறுவனங்களை நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றின் நிர்மாணப் பராமரிப்புப் பணிகளுக்காக இணைத்துக் கொள்ளல்.

xviii. மாகாணப் பணிப்பாளர் உடன் அல்லது மாகாணப் பணிப்பாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு இந்த நியதிப் பட்டயத்தின் பணிகள், செயற்பாடுகள் தொடர்பான எந்த ஒரு இடத்திற்கும் அவசியத்துக்கேற்ப எந்த நேரத்திலும் பிரவேசிக்கலாம்.

xix. அமைச்சின் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் வரும் விடயங்களுக்காக பொறியியல் சார் ஆலோசனை வழங்கல்.

xx. திணைக்களத்தின் பணிகளை மேற்கொள்வதற்கு அவசியமான ஏனைய அதிகாரங்கள்.

## III ஆம் பகுதி

### பொதுவான நடவடிக்கைகள்

8. 1. மாகாணப் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் அனைத்துக் குளங்கள், அணைக்கட்டுகள் கால்வாய் அணை, அல்லது நீர்ப்பாசனத் தொகுதி அல்லது நீர்ப்பாசன முன்வொழிவொன்றுக்காக நீர்ப்பாசன முகாமைத்துவ அபிவிருத்திக் குழு என்ற பெயரில் (இதன் பின்னர் குழுமம் என அடையாளப்படுத்தப்படும்) குழுமம் ஒன்றை மாகாணப் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் அமைத்துக் கொள்ளலாம்.

2. எவ்வகையான நீர்ப்பாசன முகாமை அபிவிருத்தி குழுமங்களாயினும் மாகாணப் பணிப்பாளரின் காரியாலயத்தில் பதிவு செய்தல் வேண்டும். பதிவு.

3. எவ்வகையான நீர்ப்பாசன முகாமை அபிவிருத்திக் குழுமங் களாயினும் தொடந்தேர்ச்சையான இயக்கமும் பொதுவான இலட்சினையும் இருத்தல் வேண்டும். அதிகாரங்களும் பொருப்புக்களும்.

4. இங்கு குழுமங்கள் நீர்ப்பாசனத் திட்டங்களுடன் தொடர்புடைய அனைத்து கருமங்களையும் செய்வதற்கும் அவ்வாறான கருமங்களில் வழக்குத் தொடர்வதற்கு அல்லது வழக்கு தொடரப்படுவதற்கு உரித்துடைய பொது அமைப்பாக கருதப்படும்.

5. குறித்த நீர்ப்பாசன எல்லைக்குள்வயல் காணிகளிலிருந்து பயன்பெறுவோர் மற்றும் உரிமையாளர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டி அந்தந்த போகங்களில் பயிரிடல் தொடர்பான தீர்மானங்கள் அது தொடர்பான விதிமுறைகளை அமைப்பதற்கு இயலும்.

6. குறித்த விதிமுறைகளை அமைக்க அமைச்சருக்கு அதிகாரமுண்டு.

9. குழு அங்கத்துவம் குழும அங்கத்துவம் மற்றும் பதவிகள்.

1. விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட எந்த ஒருவரும் –

i. இலங்கைப் பிரசையாயின்.

ii. பதினெட்டு வயதுக்குக் குறையாதவராயின்.

iii. தாம் அங்கத்துவத்தை நாடும் நீர்ப்பாசன முகாமை அபிவிருத்திக் குழுமம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் வசிப்பவராகவோ அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கள் அப்பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபட்டவராகவோ அல்லது நீர் பெற்று விவசாயத்தில் ஈடுபடுபவராகவோ இருப்பின்

iv. பிரதிபலன் பெறும் காணிக்கு உரிமையாளரான விவசாயி அல்லது நீர் பெற்று விவசாயம் செய்கின்ற காணி உரிமையாளர் அல்லது பயனாளர்

8 ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட நீர்ப்பாசன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி குழு ஒன்றில் அங்கத்துவம் பெறலாம்.

2. குழு சார்ந்த அங்கத்தவர்கள்

i. விவசாயத் துறை சார்ந்த அதிகாரிகள், அமைப்புகள், நிறுவனங்கள்.

ii. மாகாணப் பணிப்பாளர் மூலம் அடையாளப்படுத்தப் படுகின்ற ஏதேனும் ஒரு அங்கத்துவ நிறுவனங்களின் அங்கத்தவர்கள் குழுமத்தில் அங்கத்துவம் வகிக்க முடியும்.

10.

i. மேற்படி நீர்ப்பாசனக் குழுமத்தின் அதிகாரிகளை நியமிப்பதற்காக மாகாணசபைக் கூட்டம் கூட்டப்பட்டு செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்படுகின்றவர் தலைமையில் கூட்டம் நடைபெறவேண்டும். இவ் அங்கத்தவர்களில் தலைவர், செயலாளர், நிதிச்செயலாளர், என பிரதான அதிகாரம் பெற்றவர்கள் மூவரும் உப செயலாளர், உபதலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் இருவருடன் கூடிய செயற்குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும். அதிகாரிகள் மற்றும் யாப்பு.

ii. அனைத்து முகாமை அபிவிருத்திக் குழுக்களுக்காகவும் சுயாதீனமாக அலுவலர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். அனைத்து குழுமங்களினதும் குழு உறுப்பினர் எண்ணிக்கை, நிதி, குழுமத்தை வழிநடத்துதல் என்பவற்றுக்கான விதிமுறைகள் தொடர்பான யாப்பு ஒன்று இருக்கவேண்டும் என்பதுடன் குறித்த யாப்பின் அம்சங்கள் மாகாணப் பணிப்பாளரின் பரிந்துரைக்கு அமைய அமைச்சின் செயலாளரால் காலத்துக்கு காலம் கட்டளைகள் பிறப்பிக்கலாம். இது தொடர்பன விதிமுறைகளை அமைச்சர் மூலமாக அமைக்கப்பட்டு அறிவிக்கப்பட வேண்டும்.

காலம்.

iii. நீர்ப்பாசன குழுமத்தின் காலம் ஆரம்பத் திகதி முதல் 02 வருடங்கள் செல்லுபடியாகும். காலம் முடிவடைய 14 நாட்களுக்கு முன்னர் மாகாணசபை கூட்டப்பட்டு புதிய அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும். பிரதான பதவிகளுக்காக தொடராக இரண்டு தடவைக்கு மேல் நியமிக்கப்பட முடியாது. புதிய அங்கத்தவர் நியமித்தது முதல் பழைய பகுதிகளில் இருப்பவர்களின் பதவிகள் செல்லுபடியற்றதாகும்.

iv. ஏதேனும் குழுமம் ஒன்று நிதி சார் மோசடி செய்தமை வெளிப்பட்டு அது நிரூபனமாகும் போது மாகாணப் பணிப்பளரினால் குறித்த நபரை பதவிலிருந்து நீக்கிவிடும் அதிகாரமுண்டு. அவ்வாறு நீக்கப்படுவோர் 5 வருடங்கள் கழியும் வரை மீண்டும் பதவி வகிக்க முடியாது.

v. மேலே 10 iv இற்கான மேன்முறையீடுகளை 14 தினங்களுக்குள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கலாம். செயலாலரின் தீர்மானம் இறுதியானதும் சரியானதுமாக கணிக்கப்படும்.

குழும நிதி.

11. i. யாப்பில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய அனைத்து குழுமங்களும் நிதியம் ஒன்றை பராமரிக்க முடியும். அந்த நிதியம் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற அரச வங்கி ஒன்றில் பராமரித்தல் வேண்டும்.

ii. அரசியலமைப்பின் 154 ஆவது அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அரச கூட்டுத்தாபனங்களைக் கனக்காய்வு செய்யும் நிறுவனம் ஒன்றின் மூலம் கணக்காய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

கணக்காய்வு ஒப்பந்தங்கள்.

iii. விதிக்கப்பட்டிருக்கும் அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படவிருக்கும் வரையரைகளுக்குட்பட்ட விதத்தில் எந்த தரத்தில் இருக்கும் நீர்ப்பாசன முகாமை மற்றும் அபிவிருத்திக் குழுமத்திற்கும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் அதிகாரம் உண்டு.

iv. எந்த தரத்தில் இருக்கும் நீர்ப்பாசன முகாமை மற்றும் அபிவிருத்திக் குழுமமாயினும் அது விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது மாகாணப் பணிப்பாளர் அல்லது செயலாளர் பணிப்பாளர் அல்லது இருவரின் மூலம் அதிகாரம் வழங்கப்படுகின்ற அதிகாரிகள் மூலமாக மேற்பார்வைக்கு உட்படுத்தப்படும்.

குழுமத்தின் கடமைகள்.

12. அனைத்து நீர்ப்பாசன முகாமை மற்றும் அபிவிருத்திக் குழுமங்களும் தமது அதிகாரங்களுக்கு உட்பட்டவகையில் -

(i) அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போது திட்டத்தின் பகுதிகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பாக கண்கானித்து திணைக்களத்தின் குறித்த அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

(ii) அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக்குவதற்கு அவசியமான விவசாயிகளின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளல்.

(iii) அபிவிருத்தித் திட்டங்கள் பராமரிப்பு காலங்களிலும் அதற்கு பின்னரான காலங்களிலும் நீர்ப்பாசன தொகுதிகளை சிறந்த முறையில் பேணிவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(iv) விவசாய நிலங்களில் அல்லது வயல் நிலங்களில் நெல் அல்லது வேறு வகையான பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்காக ஊக்கமளித்தல் மற்றும் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்தல்.

(v) பயிரிடல் அல்லது அது போன்றவைகளுடன் தொடர்புடைய சம்பிரதாயங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(vi) பயனாளர்கள் மற்றும் காணி உரிமையாளர்கள் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களின் படி விவசாய நடவடிக்கைகள் குறித்த காலங்களில் நடைபெறுவதனை உறுதிசெய்துகொள்ளல்.

(vii) நீர்ப்பாசனம் ஊடாக வழங்கப்படும் நீர் மற்றும் விவசாயத்துக்கு பயன்படுத்தும் நீர் என்பவற்றை முகாமைப்படுத்தல்.

(viii) மண் பாதுகாப்பு மற்றும் இரசாயன வகைகள் நோய்கள் என்பவற்றிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ix) அனைத்து நீர்ப்பாசன முகாமை அபிவிருத்திக் குழுமங்களும் தமது பிரதேசத்தில் அமைந்துள்ள வயல் நிலங்களை மற்றும் நீரோட்டங்களின் அண்மித்த நிலங்களில் இருக்கும் மரக்கிளைகளை வெட்டி அகற்றுதல் அல்லது வயல் நிலம் மற்றும் சிறுபயிர்களுக்கு பாதிப்பாக இருக்கும் சிறு காடுகளை நீக்குவதற்கான கட்டளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(x) காணி மற்றும் விவசாயத்துறை சார்பான அபிவிருத்திகளை மேற்கொள்ளும் நோக்கில் காணி உரிமையாளர்கள் மற்றும் பயனாளர்களை ஒன்றிணைத்து கூட்டங்களை நடாத்தல்

(xi). நீர்ப்பாசன திட்டங்களில் ஏற்படும் அல்லது ஏற்படுத்தப்படும் சேதங்கள் அல்லது இழப்புகள் மற்றும் வெள்ளத்தினால் அல்லது ஏனைய அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக அதிகாரிகளுக்கு உடனே தெரிவித்தல்.

*13. நீர்ப்பாசன அங்கத்தவர் தெரிவு*

*நீர்ப்பாசன அங்கத்தவர் தெரிவு.*

(i). நீர்ப்பாசன முகாமை அபிவிருத்திக் குழுவை நியமிக்கும் போது அங்கத்தவர்கள் அதிகமானவர்களின் விருப்பத்திற்கு அமைய நீர்ப்பாசன உறுப்பினர் என்ற பதவியின் கீழ் ஒருவர் நியமிக்கப்படுவார். நீர்ப்பாசன உறுப்பினர் என்பவர் முகாமை அபிவிருத்திக் குழுவின் தலைவர், செயலாளர், நிர்வாகக் குழுவின் ஒருவராகக் கூட இருக்கலாம்.

*2.*

*நீர்ப்பாசன அங்கத்தவர்கள் விலகுதல்.*

(i) மாகாணப் பணிப்பாளருக்கு அனுப்புகின்ற விலகிக் கொள்ளல் கடிதம் மூலமாக அல்லது

(ii) வினைத்திறன் இல்லாமை அல்லது சரியான முறையில் கடமையாற்றாமை என்பன போன்ற காரணம் காட்டி மாகாணப் பணிப்பாளர் அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலர் மூலம் நிகழ்த்தப்படும் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் நீக்கப்பட்டாலன்றி.

(iii) மற்றைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் தெரிவான தினத்திலிருந்து இரண்டு வருடங்கள் அல்லது யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையரையில் நீர்ப்பாசன உறுப்பினராக கடமையாற்றுவார்.

*வயல் பெயர்ப்பட்டியல் தயாரித்தல்.*

3. நீர்ப்பாசன உறுப்பினரின் கடமைகள் :

i. குழுவின் மற்றைய அங்கத்தவர்களை இணைத்துக் கொண்டு வயல்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்தல்.

ii. இந்தப் பெயர்ப்பட்டியலுக்கு அமைய காணி உரிமையாளர் அல்லது பயனாளரின் காணியின் அளவுக்கு அமைய பிரதான நீர்ப்பாசனக் கால்வாய் மற்றும் அணைக்கட்டுகள் என்பன சுத்திகரிப்பதற்காக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

*பகுதி அடையாளமிடல்.*

iii. ஒவ்வொரு உரிமையாளர் மற்றும் பயனாளர்களுக்கும் பிரித்து வழங்கப்பட்ட பகுதியை, மரக்குற்றிகள் அல்லது சீமெந்து அல்லது கல்லால் ஆக்கப்பட்ட தூண்கள் என்பவற்றால் அடையாளப்படுத்தும் அமைப்பில் நிலத்தில் புதைத்து ஒரு பகுதி தெரியும் விதத்தில் அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

iv. இவ்வாறு அடையாளமிட்டு பிரித்துக் கொடுக்கப்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு போகத்தின் ஆரம்பத்திலும் வளர்ந்திருக்கும் புதர்களை நீக்குவதுடன் அணைக்கட்டில் இருந்து மண் அகற்றப்பட்டிருக்கும் இடங்களில் மண் நிறப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் நீர்த்தேக்கத்தில் வளர்கின்ற காடுகளை அப்புறப்படுத்தல் வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக போகங்ளுக்கு இடையில் நீர்த்தேக்கப் பராமரிப்புப் பணிகள் செய்ய வேண்டும் என தீர்மானிக்கும் போது பங்காளர்களுக்கு தகவல் அனுப்பி குறித்த பணியை நிறைவேற்றிக் கொள்வது சட்டபூர்வமாக வேண்டும்.

v. 13-3 (iii) உப பிரிவின் படி தமக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை சுத்தம் செய்யாத பங்குதாரர்கள் அல்லது அப்பகுதியை முகாமை அபிவிருத்திக் குழுவினால் சுத்திகரித்து அதற்கான செலவை வழங்காமல் இருக்கும் நபர்களுக்கு அறிவித்தல் அனுப்புதல்.

i. அவ்வறிவித்தல் கிடைத்து 21 நாட்களில் குறித்த தொகையை செலுத்தாத போது இந்த நியதிச் சட்டத்தின் படி குற்றமிழைத்தவராக கருதப்படுவார்.

ii. மேற்படி i குற்றமிழைக்கும் போது குழுமத்தினால் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றைப் பதிவு செய்து குறித்த தொகையை அறவிட முயற்சிக்க வேண்டும். அவ்வாறு அறவிடப்படும் தொகை குழுமத்தின் கணக்கில் சேர்க்க வேண்டும்.

vi. நீர்ப்பாசனத்திட்டங்களை பாதுகாத்தல், நீர்ப்பாசன திட்டங்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் குறித்து மாகாணப் பணிப்பாளருக்கு அறிவித்தல், சட்டத்தின் முன் கொண்டு செல்வதற்காக ஒத்துழைத்தல், நீர்ப்பாசனத் திட்டங்களில் இருந்து செல்லும் நீரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுத்தல், விவசாயத் திட்ட நேரசூசிக்கு அமைய விவசாயத்தை கண்காணித்தலும் ஒருங்கமைத்தலும் வேண்டும்.

*14.* மேற்படி கருமங்களை ஆற்றுவதற்காக அனைத்து விவசாயத்தில் ஈடுபடும் காணி உரிமையாளர்கள், பயனாளர்கள், குத்தகைக்கு பெற்றவர்கள் தாம் பெறும் அறுவடையிலிருந்து அல்லது பொதுக் கூட்டத்தில் முடிவு செய்யும் தொகை சந்தாவாக வழங்குதல் வேண்டும். அவ்வாறு செலுத்த மறுப்பது இந் தியதிச் சட்ட வரைபின் பிரகாரம் குற்றமாகும். *சிறத்தைக் கொடுப்பனவு.*

## IV ஆம் பகுதி

*15. நீர்ப்பாசன முகாமைத்துவ பிரதேச அதிகார சபையை நிறுவுதல்*

*15. 1* (i) பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்திருக்கும் நீர்ப்பாசன முகாமை அபிவிருத்திக் குழுக்கள் ஒன்றிணைந்து மத்திய மாகாணத்தின் அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் நீர்ப்பாசன பிரதேச அதிகார சபைகளை நிறுவ முடியும். (இதன்பின்னர் பிரதேச அதிகார சபை என குறிப்பிடப்படும்). இந்த பிரதேச அதிகார சபை குறித்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்திருக்கும் குழுமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டதாக அமையும். அவர்களிலிருந்து தலைவர், செயலாளர், பொருளாளர் தெரிவு செய்யப்பட வேண்டும். *நீர்ப்பாசன முகாமைத்துவ பிரதேச அதிகார சபை அமைத்தல்.*

(ii) பிரதேச அதிகார சபையின் அதிகாரிகளை நியமிப்பதற்காக மகாண சபை ஒன்று கூட்டப்படல் வேண்டும். செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்படுகின்றவர் தலைமையில் கூட்டம் நடாத்தப்படவேண்டும். இவ் அங்கத்தவர்களில் தலைவர், செயலாளர், நிதிச்செயலாளர் என பிரதான அதிகாரம் பெற்றவர்கள் மூவரும் உப செயலாளர், உப தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் நால்வருடன் கூடிய செயற்குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும்.

(iii) அனைத்துப் பிரதேச அதிகார சபைகளுக்காகவும் குழு உறுப்பினர் எண்ணிக்கை, நிதி, குழுமத்தை வழிநடத்துதல் என்பவற்றுக்கான விதிமுறைகள் கொடர்பான யாப்பு ஒன்று இருக்கவேண்டும் என்பதுடன் குறித்த யாப்பின் அம்சங்கள் மாகாணப் பணிப்பாளரின் பரிந்துரைக்கு அமைய அமைச்சின் யெலாளரால் காலத்துக்குக் காலம் கட்டளைகள் பிறப்பிக்கலாம். இது தொடர்பான விதிமுறைகளை அமைச்சர் மூலமாக அமைக்கப்பட்டு அறிவிக்கப்பட வேண்டும்.

(iv) பிரதேச அதிகார சபையின் காலம் ஆரம்பத் திகதி முதல் 02 வருடங்கள் செல்லுபடியாகும். காலம் முடிவடைய 14 நாட்களுக்கு முன்னர் மகானசபை கூட்டப்பட்டு புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். பிரதான பதவிகளுக்காக தொடராக இரண்டு தடவைக்கு மேல் நியமிக்கப்பட முடியாது. புதிய அங்கத்தவர் நியமித்தது முதல் பழைய பதவிகளில் இருப்பவர்களின் பதவிகள் செல்லுபடியற்றதாகும். *காலம்.*

(v) ஏதேனும் குழுமம் ஒன்று நிதிசார் மோசடி செய்தமை வெளிப்பட்டு அது நிருபனமாகும் போது மாகாணப் பணிப்பாளரினால் குறித்த நபரை பதவியிலிருந்து நீக்கிவிடும் அதிகாரமுண்டு. அவ்வாறு நீக்கப்படுவோர் 5 வருடங்கள் கழியும் வரை மீண்டும் பதவி வகிக்க முடியாது.

(vi) மேலே (15V) இற்கான மேன்முறையீடுகளை 14 தினங்களுக்குள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கலாம். செயலாலரின் தீர்மானம் இறுதியானதும் சரியானதுமாக கணிக்கப்படும்.

2. மேலே (15 -1) இன் கீழ் நிறுவப்படுகின்ற அதிகார சபைகள் மாகாணப் பணிப்பாளரின் காரியாலயத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

3. எந்த ஒரு பிரதேச அதிகார சபைக்கும் யாப்பு மற்றும் முத்திரை இருக்க வேண்டும்.

4. இங்கு அதிகார சபை நீர்ப்பாசனத்துடன் தொர்புடைய அனைத்து கருமங்களையும் ஆற்றுவதற்கும் வழக்கு தொடர்வதற்கும் வழக்கு தொடரப்படுவதற்கும் உரிய வகையில் அதிகாரமுள்ள நிறுவனமாக கருதப்படும்.

அதிகாரம் மற்றும் பொறுப்புகள்.

16. பிரதேச அதிகார சபை தமது அதிகார எல்லைக்குள் -

i. தெரிவு செய்யப்பட்ட பிரதான அலுவலர்கள் மூவர் பிரதேச விவசாயக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும்.

ii. குழுக்களுக்கிடையிலான தொடர்புகளை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல்.

iii நீர்ப்பாசன வேலைகளை அபிவிருத்தி செய்தல்.

vi. நீர்ப்பாசன முறைகளின் சீர்திருத்தங்கள் அபிவிருத்தி என்பவற்றில் முதன்மைப்படுத்தப்பட வேண்டியவைகளைத் தீர்மானித்தல்.

v. குறித்த நீர்ப்பாசனப் பாதுகாப்புப் பகுதிகளை பாதுகாத்தலும் நீரேந்துப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தலும் வேண்டும்.

vi. அனைத்து நீர்ப்பாசனத் திட்டங்களினதும் மேட்டு நிலங்களை அபிவிருத்தி செய்வதற்காக உதவுதல்.

vii. நீர்பாசனத் திட்டங்களில் இங்கமாக இருக்க வேண்டும் என சட்டம் ஊடாக குறிப்பிடப்படும் பகுதிகளை வேறாக ஒதுக்கி வைத்துக்கொள்வதற்கும் பாதுகாப்பதற்கும் உதவுதல்.

நிதியம்.

17. i. அனைத்துப் பிரதேச அதிகார சபைகளும் நிதியம் ஒன்றை பேண வேண்டும். மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற அரச வங்கி ஒன்றில் வங்கிக்கணக்கு ஒன்றை பராமரித்தல் வேண்டும்.

கணக்காய்வு.

ii. அரசியலமைப்பின் 154 ஆவது அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அரச கூட்டுத்தாபனங்களைக் கணக்காய்வு செய்யும் நிறுவனம் ஒன்றின் மூலம் கணக்காய்வுக்கு உற்படுத்த வேண்டும்.

ஒப்பந்தங்கள்.

iii. விதிக்கப்பட்டிருக்கும் அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படவிருக்கும் வரையறைகளுக்குட்பட்ட விதத்தில் எந்தத் தரத்தில் இருக்கும் நீர்ப்பாசன முகாமை மற்றும் அபிவிருத்தி குழுமத்திற்கும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் அதிகாரம் உண்டு.

vi. எந்தத் தரத்தில் இருக்கும் நீர்ப்பாசன முகாமை மற்றும் அபிவிருத்தி குழுமமாயினும் குறித்த விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது மாகாணப் பணிப்பாளர் அல்லது செயலாளர், பணிப்பாளர் அல்லது இருவரின் மூலம் அதிகாரம் வழங்கப்படுகின்ற அதிகாரிகள் மூலமாக மேற்பார்வைக்கு உட்படுத்தப்படும்.

நியதிகள் உருவாக்கும் அதிகாரம்.

18. மேலே 8 மற்றும் 15 ஆம் பிரிவுகளின் கீழ் உருவாக்கப்படுகின்ற குழுமங்கள் மற்றும் அதிகார சபைகள் தொடர்பான மற்றைய காணிகள், நியதிகள் தொடர்பாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் நியதிகள் அமைக்கப்படலாம்.

V ஆம் பகுதி

**குற்றமும் தண்டனையும்**

*நீர்ப்பாசனத் திட்டத்தில் நட்டம் ஏற்படுத்துவது குற்றமாகும்.*

19. மாகாணப் பணிப்பாளரின் முன் அனுமதியின்றி,

1. யாரேனும் ஒருவர் ஏதேனும் நீர்ப்பாசனத் திட்டத்திற்கு, கால்வாய்க்கு, அணைக்கட்டுக்கு, குளத்திற்கு, குளத்தின் நுழைவாயிலுக்கு, நீர்ப்பாசனத் தொகுதிக்கு, வாய்க்காலுக்கு, ஓடை ஒன்றுக்கு, ஆற்றுக்கு, நீரோட்டம் ஒன்றுக்கு, நீர்ப்பாதுகாப்பு வலயத்திற்கு, நீர்ப்பாசன பாதுகாப்பு வலயத்திற்கு, நீர்ப்பாசன அமைப்பு ஒன்றிற்கு அல்லது நீர்ப்பாசன அமைப்பிற்கான பாதை ஒன்றிற்கு ஏதேனும் அடிப்படையில்

   i. வழிமறைத்தல்

   ii. தடுத்தல்

   iii. நிலப்பரப்பை தன்வயமாக்குதல்

   vi. வழிமறித்தல் அல்லது தனதாக்கிக் கொள்வதற்கான செயற்பாடுகளை அமைத்தல்

   v. நட்டம் ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடல்

   vi. திட்டத்திற்கு சொந்தமான நீரை வேண்டுமென்றோ அல்லது துவேச எண்ணத்திலோ வீணாக திறந்துவிடல்

   vii. குறித்த நிலப்பரப்பில் விவசாயம் செய்தல், நீர்ப்பாசன திட்டத்தில் அல்லது நீர்ப்பாசன பாதுகாப்பு வலயத்தினுள் கட்டிடங்கள் அமைத்தல்

   viii. குறித்த பகுதியிலிருந்து அனுமதியின்றி மண் அல்லது மணல் அகற்றுதல் அல்லது மற்றும் அகற்றுவதற்கு திட்டமிடல்

   ix. குறித்த பிரதேசத்தினுள் நெற் செய்கையல்லாத வேறு விடயங்களுக்காக மண், மணல், கூலான்கல், கல் போன்றவற்றை வெளியிலிருந்து கொண்டுவந்து இடல்

   x. குப்பைகளை கொட்டுதல் அல்லது கொட்டுவதற்கு உடந்தையாக இருத்தல்

   xi. மிருகங்கள் அல்லது வாகனங்களின் ஊடாக சேதம் விளைவித்தல் அல்லது சேதம் விளைவிக்க உடந்தையாக இருத்தல்

   xii. மேற்படி நடவடிக்கைகளுக்காக உதவுதலை அனுமதித்தல்

   இந்த பிரகடனத்தின் பிரகாரம் குற்றமிழைத்தவராக கருதப்படுவார்.

2. அடையாளம் காணப்பட்ட நீர்ப்பாசன தொகுதி ஒன்றினுள் மாகாணப் பணிப்பாளரினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு அமையாத விதத்தில் விவசாய நோக்கங்களுக்காக கிணறுகள் தோண்டுதல், கட்டுதல் என்பன இப்பிரகடனத்தின் படி குற்றமாகும்.

3. நீர்ப்பாசன முகாமைக்குழுமம் மற்றும் அல்லது அதிகார சபை விவசாயம் சம்பந்தமாக மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு மாற்றமாக செயற்படுவது இப்பிரகடனத்தின் படி குற்றமாகும்.

*மாகாணப் பணிப்பாளரினால் கட்டளை வழங்கல்.*

20. எவரேனும் 19 ஆம் பிரிவின் விதிமுறைகளை மீறியதாக மாகாணப் பணிப்பாளருக்கு அறியக்கிடைக்கும் போது,

(i) குற்றத்தின் பாதிப்புக்கள் உடனடியாக சரிசெய்யப்பட வேண்டுமெனவும்,

(ii) தொடர்ந்தும் குற்றமிழைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டுமெனவும்,

(iii) 7 நாட்களுக்கு குறையாமலும் 14 நாட்களுக்கு அதிகரிக்காத வகையிலான காலப்பகுதிக்குள் குறித்த கருமம் முன்னிருந்த நிலைக்கு சீர்செய்யப்பட வேண்டுமெனவும், அறிவுறுத்தல் வழங்கிய பின் உடனடியாக பின்னிணைப்பு I இன் பிரகாரம் கட்டளை ஒன்று மாகாணப் பணிப்பாளரினால் வழங்கப்பட வேண்டும்.

*கட்டளைகளை ஏற்காதபோதுநீதிமன்ற நடைமுறை.*

*21.* (i) எவரேனும் மேற்படி 20 ஆம் பிரிவின் கட்டளைக்கேற்ப செயலாற்றாத போது அது சம்பந்தமாக அதிகாரமுள்ள நீதவான் நீதிமன்றம் ஒன்றிற்கு எழுத்து மூலம் அறியப்படுத்தும் அதிகாரம் மாகாணப் பணிப்பாளருக்கு அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்படுபவர்களுக்கு உண்டு.

(ii) 21 (i) உப பிரிவின் பிரகாரம் எழுத்து மூலமான அறிவுறுத்தல் நீதிமன்றத்திற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர் நீதவான் முன்னிலையில் நடாத்தப்படும் சிறிய வழக்கு விசாரணையின் பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்படும் போது பத்தாயிரம் ரூபாய்க்கு அதிகரிக்காத தொகை தண்டப் பணமாக அறவிடல் அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலம் சிறைக் காவலில் வைத்திருத்தல் என்னும் தண்டனைகளில் ஒன்றை அல்லது இரண்டையும் தண்டனையாக வழங்குதற்கு மேலதிகமாக குறித்த நடவடிக்கை ஊடாக ஏற்படுத்தப்பட்ட சேதத்தினை சீரமைப்பதற்கான தொகையை அறவிடலாம். செலவு குறித்து மாகாணப் பணிப்பாளர் வழங்கும் அறிக்கை இங்கு நீதியின் முன் சாட்சியாக கருதப்படும்.

(iii) பணிப்பாளரினால் 20 ஆம் பிரிவின் பிரகாரம் பிறப்பித்துள்ள கட்டளையை நிறைவேற்றுமாறு உத்தரவு இடும் அதிகாரம் நீதிபதிக்கு உண்டு.

*பொதுவான தண்டனைகள்.*

*22.* இந்த பிரகடனத்தின் ஏதேனும் பகுதிகளையோ அல்லது அதன் பிரகாரம் அமைக்கப்பட்ட விதிமுறைகளையோ தனது செயற்பாடுகள் மூலமாக மீறும் ஒருவர் அந்தப் பிரகடனத்தின் பிரகாரம் குற்றம் இழைத்தவராக கருதப்படுவதுடன், அது இப்பிரகடனத்தில் விஷேடமாக தண்டனைகள் குறிப்பிடப்படாத குற்றமாக கருதப்படும் சந்தர்ப்பங்களில் நீதவான் முன்னிலையில் நடாத்தப்படும் சிறிய வழக்கு விசாரணையின் பின்னர் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்படும் போது ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகரிக்காத தொகை தண்டப்பணமாக அறவிடல் அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலம் சிறைக் காவலில் வைத்திருத்தல் என்னும் தண்டனைகளில் ஒன்றை அல்லது இரண்டும் வழங்கப்படும்.

VI ஆம் பகுதி

**பொது விதிகள்**

*நியதிச்சட்டத்துடன் தொடர்புடைய நியதிகள் உருவாக்கல்.*

*23.* இந்த நியதிச் சட்டவரைபில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காக அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கு தேவையான விதிமுறைகளை அமுல்படுத்தும் அதிகாரம் அமைச்சருக்கு உண்டு.

*24.* i. அமைச்சரால் உருவாக்கப்படும் விதிமுறைகள் அனைத்தும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது விதிமுறை செல்லுபடியாகும் திகதியாக வர்த்தமானியில் குறித்துள்ள பிந்திய திகதியிலிருந்து அமுலாக்கப்படும்.

ii. அமைச்சரால் உருவாக்கப்பட்ட விதிமுறைகளை வர்த்தமானியில் பிரசுரித்ததன் பின்னர் ஒரு மாத காலத்திற்குள் மாகாண சபையின் அனுமதிக்காக

சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவற்றில் ஏதாவது ஒரு விதிமுறையை மாகாண சபை ஏற்காதவிடத்து அவ்விதிமுறையின் கீழ் குறித்த நிபந்தனை அனுமதி இல்லாத திகதி முதல் அனுமதி வழங்கிய திகதி வரையான காலப்பகுதியில் செய்யப்பட்ட பணிகளுக்கு எந்தவித பாதகங்களும் ஏற்படாதவாறு அந்நிபந்தனைகள் நீக்கப்பட்டதாக கருதப்படுவதுடன் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். மாகாண சபை அனுமதி வழங்கும் அனைத்து நியதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

iii. இந்த பிரகடனத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட விதிமுறைகள் மாகாண சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் அந்த நிபந்தனைகள் இப்பிரகடனத்தின் மூலமாக வலுப்பெற்றதாக கருதப்படும்.

iv. அரசின் ஏதேனும் ஒரு திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் அல்லது அதிகாரசபை அல்லது தனியார் அமைப்பு ஒன்றின் ஊடாக மேலே 7(V) அத்தியாயத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஏதேனுமொரு அடிப்படையிலான நீர்ப்பாசன தொழில் ஒன்றை புனரமைத்தல், அபிவிருத்தி செய்தல் அல்லது பாதுகாத்தல் போன்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்வதாயின் அதற்கான அனுமதியை மத்திய மாகாண பணிப்பாளரிட மிருந்து எழுத்து மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

VII ஆம் பகுதி

**இடைக்கால விதிமுறைகள்**

25. குறித்த திகதிக்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தில் மாகாண பணிப்பாளராக கடமையாற்றியவரும் மற்றைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களும் இந்த பிரகடனத்தின் நியதிகள் விதிமுறைகள் மூலம் பாதிக்கப்படாத அடிப்படையிலான நியதிகள் விதிமுறைகளுக்கு உட்பட்ட மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் பணியாளர்களாக கருதப்படல் வேண்டும். *முன்னரிலிருந்தே சேவையாற்றும் பணிப்பாளர் மற்றும் அலுவலர்.*

26. i. குறித்த தினத்திற்கு முன்னரான மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்கள், பொறுப்புக்கள், கடன் பொறுப்புக்கள், வழக்கு மற்றும் அவை சார்ந்தவைகள் திணைக்களத்துடனான சகல ஒப்பந்தங்கள் என்பன இந்த பிரகடனத்தின் மூலமாக நிறுவப்படும் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள், கடன் பொறுப்புக்கள், வழக்கு மற்றும் அவை சார்ந்தவைகள், ஒப்பந்தங்களாக கருதப்படும். *சொத்துக்கள், பொறுப்புக்கள், ஒப்பந்தங்கள் முன்னெடுத்தல்.*

ii. குறித்த தினத்திற்கு முன்னராக கண்டி, மாத்தளை, நுவரெலியா காரியாலயங்களுக்கு சொந்தமான சொத்துக்கள், பொறுப்புக்கள், கடன் பொறுப்புக்கள், வழக்கு மற்றும் அவை சார்ந்தவைகள், மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர்கள் மேற்கொண்ட சகல ஒப்பந்தங்கள் என்பன இந்த பிரகடனத்தின் மூலமாக நிறுவப்படும் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள், கடன் பொறுப்புக்கள், வழக்கு மற்றும் அவை சார்ந்தவைகள் ஒப்பந்தங்களாகக் கருதப்படும்.

VIII ஆம் பகுதி

**பொதுப்பதங்களுக்கான பொருள் விவரணம்**

பொருள் விவரணம்.

27. விஷேடமாக குறிப்பிடப்படாத போது பொதுப்பதங்களுக்கான விளக்கம் கீழ் வருமாறு அமையும்.

"நீர்ப்பாசன பணி" எனப்படுவது ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களின் ஊடாக செல்லும் நதிகளுடன் தொடர்புடைய நீர்ப்பாசனத் திட்டங்கள், மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தி சார்ந்த திட்டம் தவிர்ந்த அனைத்து நீர்ப்பாசன திட்டங்கள் தொடர்பான திட்டமிடல், செயற்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் பராமரித்தல் ஆகும்.

"சிறிய நீர்ப்பாசன பணி" எனப்படுவது இருநூறு ஏக்கர் வரையான விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்கின்ற நீர்ப்பாசனத் திட்டமும்.

"மாகாணம்" எனப்படுவதாவது மத்திய மாகாணம் என்பதாக கருதப்படும்.

"மாகாண சபை" எனப்படுவதாவது மத்திய மாகண சபை ஆகும்.

"ஆளுநர்" எனப்படுவதாவது அரசியல் யாப்பின் பிரகாரம் மத்திய மாகாணத்தின் ஆளுநராக சமகாலத்தில் கடமையில் இருப்பவரைக் குறிக்கும்.

"அமைச்சர்" மத்திய மாகாணத்தின் நீர்ப்பாசன விடயப்பரப்பிற்கு பொறுப்பான அமைச்சரைக் குறிக்கும்.

"அமைச்சின் செயலாளர்" என்பதாவது மத்திய மாகாண நீர்ப்பாசன விவகாரங்களுக்கான அமைச்சரின் செயலாளர் என்பதைக் குறிக்கும்.

"மாகாணப் பணிப்பாளர்" மத்திய மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்பதைக் குறிக்கும்.

"பொறியியலாளர்" என்பது மத்திய மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பொறியியலாளர்களைக் குறிக்கும்.

"கட்டுமானபணி" என்பதாவது நீர்பாசனத் திட்டங்களுடன் தொடர்பு பட்டுக் கூறப்படின் நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பிலான அபிவிருத்தி அல்லது கைவிடப்பட்ட திட்டம் ஒன்றை திருத்தி அமைத்தல் அல்லது புனர் நிர்மாணம் செய்தல் (அடுத்ததாக விளக்கம் தரப்பட்டுள்ள "பராமரித்தல்" ஏதேனும் ஒரு நீர்ப்பாசனத்திட்டத்தை பாதுகாப்பதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கை அல்லது அதற்கு அத்திட்டத்தின் ஊடாக நீர் விநியோகிக்க முடியுமான நிலப்பகுதி அல்லது பிரதேசம் அல்லது அத்திட்டத்தின் ஒரு பகுதியைக் குறிக்கும்.

"பராமரித்தல்" என்பதாவது நீர்ப்பாசனத் திட்டங்களுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுமிடத்து அக்காலப்பகுதியில் செயற்பாட்டிலுள்ள நீர்ப்பாசனத் திட்டம் மூலம் நீர் வழங்க முடியுமான பிரதேசம் அல்லது பாதுகாத்தலைக் குறிக்கும்.

"நீர்ப்பாசனத் திட்டம்" என்பதாவது மாகாண நீர்பாசன விடயப்பரப்புக்குள் அடங்கக்கூடிய :

(i). நீர்ப்பாசனத் திட்டத்துக்கு சம்பந்தமான அல்லது இடைத் தொடர்புள்ள வாவியொன்று, அடுக்கு வடிவிலான நீர்த்தேக்கம், அணைக்கட்டு, கால்வாய், ஓடை, வயல்வெளிசார் சிறிய நீர்த்தேக்கங்கள் அல்லது சிறு நீரோட்டம்.

நீர்ப்பாசனத் திட்டமொன்றை நிர்மாணிப்பது அல்லது பராமரித்தலுடன் நேரடியாகத் தொடர்புபடும் அல்லது இடைத் தொடர்புள்ள அல்லது பகுதியளவில் தொடர்புள்ள ஏதேனும் திட்டங்கள் பாதை, பாலம், கால்வாய், தடுப்புகள் அல்லது பொறியியல் திட்டங்கள்.

(ii). பயிரிடப்படத்தக்க ஏதேனும் ஒரு பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபடும் பகுதியொன்றிற்கு வெள்ளம் போன்ற அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்காக அமைக்கப்படும் ஒரு பொறிமுறை அல்லது அணைக்கட்டு அல்லது பொறியியல் திட்டம் நீர்ப்பாசனத் திட்டம் எனப்படும்.

"நீரோட்டம்" என்பதாவது ஏதேனும் ஒரு நதி, கிளை நதி, ஆறுகள், ஓடைகள், நீரூற்றுகள் அல்லது அவ்வப்போது தோன்றும் நீரோட்டங்கள் என்பனவற்றின் பரப்பும் அவற்றின் அகலப் பகுதியின் அளவும் கரையிலிருந்து வெளிப்பகுதியில் பரந்துள்ள பிரதேசமும் இதில் அடங்கும்.

"வயற் காணி" என்பது நெல் பயிரிடப்பட்டுள்ள அல்லது முன்னர் பயிரிடப்பட்ட அல்லது நெல் பயிரிட பொறுத்தமானதான நிலத்தைக் குறித்துக் காட்டப்படுவதுடன் அதற்கு அண்மித்த கமத்தை எனும் இடம் மற்றும் விவசாயி தங்குவதற்காக அமைத்த இடம் அல்லது விவசாயியின் பாவனைக்காக அமைக்கப்பட்ட இடங்கள் இதில் அடங்கும். விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளாத காணிகள் மற்றும் வயல் காணி அல்ல என விவசாயத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்பட்ட காணிகள் இதில் அடங்காது.

"பயனாளர்" என்பது குத்தகைப் பெறுநர் அல்லது வட்டியின் அடிப்படையில் விவசாய நிலம் ஒன்றைப் பயன்படுத்துபவர் அல்லது தற்போதைய உரிமையாளராக கருதப்படுபவர் என்பதுடன் காணி அபிவிருத்திச் சட்டம், அரச காணிச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் நியதிச்சட்டத்தின் அடிப்படையில் விவசாய நிலம் ஒன்றை பயன்படுத்துபவர் அல்லது இலாபம் பெறுபவர் வாடகைக்கு பெற்றவர் இதில் அடங்கும்.

"கால்வாய் அணை அல்லது நீர்பாசனத் தொகுதி" என்பது ஏதேனுமொரு சரிவான பகுதியில் ஆரம்பித்து ஒரு பகுதியை நோக்கி ஓடும் நீர் படிப்படியாக இணைந்து அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும் பிரதேசங்களிலிருந்து வடிந்தோடும் நீரும் சேர்ந்து நீரோட்டமாக ஆறு ஒன்றுடன் சேர்வதற்கு முன்னர் நீரைச் சேகரிப்பதற்காக அமைக்கப்பட்ட குளம் ஒன்றுடனான அனைத்து நீர்ப்பாசனக் கட்டுமானங்களையும் மற்றும் நீரைப் பெற்றுத்தரும் பிரதேசம், பாதுகாப்புப் பிரதேசம் வயல் நிலம், ஓடைகள் நீரூற்றுக்கள் என்பன அடங்களாக நீர்ப்பாசனங்கள் சிலவற்றின் அல்லது பலவற்றினால் இணைந்த பிரதேசத்தைக் குறிக்கும்.

"பகுதி" என்பதாவது ஏதேனுமொரு நீர்ப்பாசனத் திட்டத்திலிருந்து நீர் பெற்று விவசாயம் மேற்கொள்ளும் வயல் பெயர்ப்பட்டியலில் உட்படுத்தப்பட்டிருக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் வயல் நிலத்தின் மொத்த அளவுகளை கணக்கிட்டு விகிதாசார அடிப்படையில் பிரித்ததின் பின்னர் பிரதான கால்வாய் அல்லது பிரதான நீரோட்டத்தின் அளவை வயல் நிலங்களின் அடிப்படையில் விகிதாசார முறையில் வழங்கப்படுகின்ற பகுதியைக் குறிக்கும்.

"சிறத்தைக் கொடுப்பனவு" என்பதாவது நீர்ப்பாசன அங்கத்தவர் தமக்குச் சொந்தமான வயல், பயனாளராக விவசாயத்தில் ஈடுபடுகின்ற வயலில் விவசாயம் செய்வதற்காக ஏற்கின்ற பொறுப்புகள் மற்றும் சிறத்தைகளுக்கு மேலதிகமாக அந்த வயற் காணியையும் நீர்ப்பாசனத்தையும் உரிய முறையில் பராமரித்து முறையாக விவசாயப் போகங்களை பயிரிடுவதற்கு வழங்கும் உதவிக்காக மற்றைய விவசாயிகளை விடவும் எடுத்துக்கொள்கின்ற அதிக சிறத்தை மற்றும் பொறுப்பு என்பவற்றுக்காக மற்றைய விவசாயிகளால் அவர்களது விருப்பத்தின் பெயரால் வழங்கப்படுகின்ற அறுவடையின் ஒரு பகுதியைக் குறிக்கும்.

"நீர்பாசனப் பாதுகாப்பு வலயம்" எப்போதாவது ஏதேனும் குளம் அணைக்கட்டு அல்லது நீரோட்டம் ஒன்றைப் பாதுகாப்பதற்காகவும் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பாதுகாக்கப்படுகின்ற காணியாகும் அதாவது :

குளம் அல்லது அணைக்கட்டு - உயர் நீர்மட்டத்திலிருந்து 10 மீட்டர்

நீர்ப்பாசனக் கால்வாய் - கால்வாயின் ஆழத்தின் அகலம் 3 மீற்றர் அல்லது அதற்கு குறைந்திருப்பின் கால்வாயின் மருங்கின் கூடிய நீர்மட்டத்திலிருந்து 5 மீற்றர்களும்

கால்வாயின் ஆழம் 3 மீற்றருக்கு அதிகரிக்கும்போது கால்வாயின் மருங்கின் கூடிய நீர்மட்டத்திலிருந்து 10 மீற்றடர்களும்.

"நீர்ப்பாசனப் பாதுகாப்பு" வலயமாகும்.

28. இந்தப் பிரகடனத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான பிரசுரங்களில் ஏதேும் முரண்பாடுகள் இருக்குமிடத்து சிங்கள மொழியிலுள்ள பிரகடனமே வலுப்பெறுவதாக இருக்கும்.

**பின்னிணைப்பு I**

**A படிவம்**

*மத்திய மாகாணத்தின் 2017, 5 ஆம் இலக்க நீர்ப்பாசனப் பிரகடனத்தின் பிரிவு (..................) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி ...................................................................... நீர்ப்பாசனப் பணிப்பாளரான நான் ............................................................................................................. எனும் நீர் இங்கு கீழே விபரித்துள்ள குற்றத்தை இளைத்துள்ளதாக மற்றும்/அல்லது குற்றம் இளைக்க முற்படுவதாக நான் நம்புவதால்.*

*பிரகாரம் உடனடியாக செயலாற்றுமாறு மற்றும்/அல்லது*

*பிரகாரம் செயலாற்றுவதிலிருந்து/இனிமேலும் தொடர்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு மற்றும்/அல்லது*

*பிரகாரம் ........................................................... காலப்பகுதிக்குள்/உம்மால் செய்யப்பட்ட குறித்த விடயத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவருமாறு இத்தால் உத்தரவிடுகிறேன்.*

*மேற்படி உத்தரவின் பிரகாரம் செயலாற்றுவதற்கு தவறுமிடத்து நீர்ப்பாசனப் பிரகடனத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி உமக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன்*

...................................................... ............................................
*மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர்,* *திகதி*
*மத்திய மாகாணம்.*

*08 - 949*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*